திரு. சீ. க. வடிவேலு : தலைவரவர்களே, பழுதடைந்து இருக்கின்ற ஏரிகளின் "வரத்து வாய்க்கால்" வேலைகளைச் செய்வதற்கு குடிமாராமத்து மூலமாகச் செய்ய வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருப்பதால் நல்ல முறையில் அவை செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் அந்த வேலைகளுக்கு அதிக நிதி உதவி செய்யவோ அல்லது அரசாங்கமே நேரடியாக மராமத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இருக்கின்ற சட்டப்படி குடி மராமத்து மூலமாகத் தான் வரத்து வாய்க்கால் வேலைகள் செய்யப்படும். அந்த வேலைகளை பி.டபிள்யூ.டி. மூலம் செய்யலாமா என்று ஒரு குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றி விரைவாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

New tank at Thoppanpatti

* 607 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals to undertake the construction of a tank across the Aranmanai Odai in Thoppanpatti village in Dindigul; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தினால் 70.75 ஏக்கர் பாசன வசதி பெறுவதோடு 150 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படும். இதனால் 142 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

Radial bus services

* 608 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the Radial Bus Services to be introduced in Madras City by the Pallavan Transport Corporation during the year 1973?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதெனப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.

1973 ஏப்ரல் 2]

தொடக்க நிலையில் சைதாப்பேட்டை போன்ற சேருமிடங்களை இணைக்கும் துணை வழித் தடங்கள் (Feeder Routes) கொண்டு வரப்படும். இச்சோதனையின் முதல் நிலை, 1973, மே திங்கள் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பேராசிரியர் ஐயாசாமி அவர்களின் அறிக்கையை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்னை மாநகரில் பேருந்துக் கட்டணம் சம்பந்தமாக ஏதேனும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா? மேலை நாடுகளில் இருப்பதைப்போன்று இங்கேயும் எந்த வழித்தடத்தில் சென்றாலும் ஒரே கட்டணம் என்று திருத்தி அமைக்க குறிப்பு இருக்கிறதா? அவைகளை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பேராசிரியர் ஐயாசாமி அவர்கள் கிட்டத்தட்ட 25 பரிந்துரைகளை அளித்திருக்கிறார்கள். சென்னை மாநகரில் உள்ள வழித்தடங்களை நேர் வழித்தடங்கள் (ரேடியல் ரூட்ஸ்) என்றும், வட்ட வழித் தடங்கள் (சர்க்குலர் ரூட்ஸ்) என்றும், துணை வழித்தடங்கள் (ஃபீடர் ரூட்ஸ்) என்றும் மூன்று வகையாகப் பிரித்து இருக்கிறார்கள். ஃபீடர் ரூட்டுகளில் 10 பைசா கட்டணம் என்றும், நேரடியாகச் செல்லும் வழித்தடங்களில் ஒரே பஸ்ஸில் ஏறி இறங்கினால் 20 பைசா கட்டணம் என்றும், இரண்டு பஸ்களில் பயணம் செய்தால் 30 பைசா கட்டணம் என்றும் கட்டணத்தைத் திருத்தி அமைக்கலாம் என்ற ஒரு பரிந்துரையையும் தந்திருக்கிறார்கள். அது அரசின் ஆலோசனையில் இருக்கிறதே தவிர ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலை நாடுகளில் இருக்கின்ற கட்டணத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே ஒரு நகரில் எங்கே இருந்து அந்த நகரின் இன்னொரு இடத்திற்குச் சென்றாலும் ஒரே கட்டணம் என்ற நிலையை அவர்கள் எட்டிப் பிடித்திருக்கிறார்கள். நாம் அந்த அளவுக்கு இன்னும் முன்னேறவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஐயாசாமி திட்டம் சென்னை போக்குவரத்துத் திட்டத்திற்கு நல்ல விஞ்ஞான முறையில் அமைந்த திட்டமாக இருக்கிறது. அது ஆரம்பித்து

வைக்கப்படும் என்று ஏற்கெனவே அமைச்சரவர்கள் சொல்லி யிருந்தார்கள். சில ரூட்டுகளிலாவது மே ஒன்றும் தேதி அந்த முறை ஆரம்பித்து வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதல் கட்டமாக சைதாப்பேட்டை—பாரிஸ் என்ற வழித்தடத்தை மே மாதத்தில் தோடங்குவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொன்னதுபோல் வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் சொன்ன மாற்றங்கள் போக்குவரத்துத் துறையில் மே திங்களில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். இதை எப்படி எல்லாம் சீர்திருத்தப் போகிறோம் என்பதை மக்கள் நன்றாக அறிந்து கொள்ளும் அளவுக்கு, அதை அறிந்து மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு விளம்பரங்கள் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நல்ல யோசனையை அரசு ஏற்றுக் கொள்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னை நகரில் ஒரே பஸ் நாலைந்து மைல் தூரமுள்ள ரூட்டில் செல்ல வேண்டியிருப்பதை மாற்றி அதிலே இரண்டு பஸ்களை விட வேண்டுமென்று பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரில் வழித் தடங்கள் விஞ்ஞான ரீதியில் அமைக்கப்படவில்லை. எங்கிருந்து எங்கு செல்ல வேண்டுமென்றாலும் சுற்றிச் சுற்றிச் செல்லுகின்ற 117 வழித் தடங்கள் இருக்கின்றன. பேராசிரியர் அய்யாசாமி சென்னை மாநகரத்தின் சாலைகளின் அமைப்பைப் பார்வையிட்டு நேரடி வழித் தடங்களாகவும், வட்ட வழித் தடங்களாகவும் மாற்றியமைப்பதன் மூலம் இப்போது இருப்பதை 40 வழித் தடங்கள் என்ற முறையிலே குறைக்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிக் குறைப்பதன் மூலம் அதிகமான பேருந்துகளை விட முடியும். அதனால் போக்குவரத்திலே வசதிகள்

1973 ஏப்ரல் 2]

அதிகரிக்கும். ஐந்து மைல், ஆறு மைல், ஏழு மைல் என்று சுற்றிச் சுற்றிச் செல்லுகின்ற அந்த நிலைமைகள் இனி வராது என்று அரசு கருதுகிறது.

திரு. த. சோனையா : பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் திட்டத்தின்படி முதல் முதலாக அப்படி பேருந்துகளை விடுகின்ற நாளில் மக்கள் அதிலே ஓசியாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப் பட்டால் அதுவே ஒரு விளம்பரமாக அமையும். அரசு அதைச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஓசிப் பயணம் எங்கு எப்போது நடந்தாலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்று.

பிராட்வேயிலிருந்து பேருந்துகள்

* 609 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 92-ஐ பிராட்வே வரை நீட்டிக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 22—1—1973 ஆம் நாள் முதல் வழித்தடம் எண் 92 (தங்கசாலை—ஊத்துக்கோட்டை) தங்கசாலையிலிருந்து பிராட்வே வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : நீட்டித்ததற்கு நன்றி சொல்லுகிற அதே நேரத்தில் அந்த வழித் தடங்களில் தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பழையதை முற்றிலும் மறந்து விட வேண்டியதில்லை.

*** 610 வினு—திரு. கா வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 90 (சுண்ணும்புக்குளம்—தங்கசாலை) பேருந்துகளை சென்னை உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?